



புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM | VARALARUU | PUDUGAIVARALARU | VARALARUU | 7502051351





ஞாயிறு ❖ டிசம்பர். 11, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 67 ❖ ரூ.10



# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

**சோகங்கள் நமக்குச் சொந்தமானது அல்ல. அதைத் தக்க வைத்துக் கொள்வதும் தகர்த்தெறிவதும் அவரவர் துணிவில் தான் இருக்கிறது.**




தங்கமான தெரு - நெல்லுமண்டி தெரு

ஸ்ரீ புவனேஸ்வரி ஜுவல்லர்ஸ்

தங்கம் | வெள்ளி | வைரம் | பரிசுப்பொருட்கள்

3179, நெல்லுமண்டி தெரு, புதுக்கோட்டை - 622 001. போன் : 04322 222504, 222 505

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.5,055 | Rs.5,457 |


# சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டத்தில் நிவாரண முகாம்களில் 3,600 குடும்பங்கள் பாதுகாப்பு



**சென்னை, டிச.11-** மாண்டஸ் புயல் பாதிப்பால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் கனமழை மற்றும் சூறாவளி காற்று வீசியது. இதனால் ஒரு சில இடங்களில் பாதிப்பு ஏற்பட்டது. முன் எச்சரிக்கை நடவடிக்கையாக நிவாரண முகாம்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

சென்னையில் மாநகராட்சி சார்பில், 5 முகாம்களில் 318 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். புதுமனை குப்பம்பள்ளி, ஏழுகிணறு, செயின்ட் சேவியர் பள்ளி, சி.எம்.எஸ். சாலை விநாயகர் கோவில், அறிஞர் அண்ணா பள்ளி, அரசு தொடக்கப்பள்ளி ஆகியவற்றில் தங்கி உள்ளனர். இவர்களுக்கு காலை உணவாக இட்லி, பொங்கல் வழங்கப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 46 தற்காலிக நிவாரண முகாம்களில் 1,560 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். செங்கல்பட்டு மாவட்டத்தில் 22 முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன. இதில், 860 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். கடுகலுர், அலம்பறை குப்பம், கானாத்தூர், மடையம்பாக்கம், கோட்டைகாடு, மாமல்லபுரம் கொக்கிலமேடு, புளிக்குன்றம் உள்ளிட்ட பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்கள் மாவட்ட நிர்வாகம் மூலம் தங்கவைக்கப்பட்டு உள்ளனர். திருவள்ளூர் மாவட்டத்தில் 16 சிறப்பு முகாம்களில் 367 பேர் தங்கி உள்ளனர்.

முகாம்களில் தங்கியுள்ள அனைவருக்கும் 3 வேளை உணவு மற்றும் அத்தியாவசிய தேவைகள் அந்தந்த மாவட்ட நிர்வாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்து. அந்தந்த மாவட்ட அமைச்சர்கள் நேரில் சென்று ஆய்வு நடத்தினர். அதேபோல், சென்னை முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு உணவு சரிவர கொடுக்கப்படுகிறதா? என்று முதல்வர் ஸ்டாலின் நேரில் ஆய்வு நடத்தினார்.

# மதுரை அருகே சந்தன மரம் கடத்திய 4 பேர் கைது!



**மதுரை, டிச.11-** மதுரை பாலமேடு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் அண்ணாதுரை மற்றும் போலீசார் சம்பவத்தன்று நள்ளிரவு ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது பாலமேடு ஸ்டேட் பேங்க் வழியாக நேற்று முன்தினம் நள்ளிரவு 2.30 மணியளவில் இருசக்கர வாகனத்தில் 3 பேர் வந்தனர். அவர்களை சந்தேகத்தின் பேரில் போலீசார் வழிமறித்தனர்.

போலீசாரை கண்டதும் அந்த 3 பேரும் தப்பிச்செல்ல முயன்றனர். போலீசார் அவர்களை துரத்திச் சென்று பிடித்தனர். அவர்களிடம் சோதனை செய்தபோது சந்தன மரக்கட்டைகள் மற்றும் அரிவாள், கோடாரி உள்ளிட்ட ஆயுதங்கள் இருந்தன. அவர்கள் யார்? என்று விசாரித்தபோது திண்டுக்கல் மாவட்டம் சிறுமலையை சேர்ந்த முருகன் (30), சஞ்சீவி (36), மதுரை மாவட்டம் அலங்காநல்லூரை சேர்ந்த மணி (26) என்பது தெரியவந்தது.

அவர்கள் பாலமேடு அருகே உள்ள மாணிக்கம்பட்டி வனப்பகுதியில் சந்தன மரத்தை சிறிய கட்டைகளாக வெட்டி கடத்திக் கொண்டு சென்றுள்ளனர். இதையடுத்து அவர்கள் 3 பேரையும் போலீசார் கைது செய்தனர். அவர்களிடமிருந்து சந்தன கட்டைகள், கோடாரி, அரிவாள், மரம் அறுக்கும் ரம்பம் உள்ளிட்ட ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும் இந்த கடத்தலில் வேறு யாருக்கும் தொடர்பு இருக்கிறதா? என்று கைதானவர்களிடம் போலீசார் விசாரணை நடத்தினர்.

அப்போது, பாலமேடு அருகிலுள்ள பாறைப்பட்டியைச் சேர்ந்த செல்வம் (35) என்பவருக்கும் தொடர்பு இருப்பது தெரிய வந்தது. இதையடுத்து அவரை போலீசார் பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர். சந்தன மரத்தை வெட்டி கடத்தியவர்கள் சிக்கிய சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.


கார்த்திக் மெஸ்

உயர்தர அசைவ உணவகம்

Rtn. S.மூர்த்தி & பிரதர்ஸ்

சிவகாமி அம்மன் இரத்ததான கழகம்

புதுக்கோட்டை மாவட்ட இயற்கை விவசாயிகள் சங்கம்

புதிய பேருந்துநிலையம் எதிரில், புதுக்கோட்டை

செல் : 94426 42437




தென்காசி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பிரானூர் ஊராட்சியில் பிரதமர் நரேந்திர மோடியின் குடியிருக்க வீடில்லாத மக்களுக்கு வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் பிரானூர் பஞ்சாயத்து தலைவர். ஆவுடையம்மாள் தலைமையில் துணைத்தலைவர் சந்தண மாரியம்மன் முன்னிலையில் 37 பயனாளிகளுக்கு வீடு வழங்கும் திட்டத்தில் ஒதுக்கீடுசெய்யப்பட்டது. இதில், பஞ்சாயத்து செயலர் சுப்பிரமணியம் அனைவரையும் வரவேற்றார்.

# சீரான மின்விநியோகத்துக்கு நடவடிக்கை அமைச்சர் செந்தில் பாலாஜி வாக்குறுதி!



**சென்னை, டிச.11-** சென்னை மக்களை அச்சுறுத்தி வந்த மாண்டஸ் புயல் நேற்று நள்ளிரவு 2.30 மணியளவில் மாமல்லபுரம் அருகே கரையை கடந்து பலத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து மின்சாரத்துறை அமைச்சர் செந்தில்பாலாஜி விளக்கம் அளித்து மக்களுக்கு வாக்குறுதி அளித்துள்ளதாவது:

மாண்டஸ் எதிரொலியால், சென்னையில் பலத்த காற்று வீசியது. இதனால் ஆங்காங்கே மரம், மின் வயர்கள் அறுந்து விழுந்தன. இதற்கிடையே, புயலின் தாக்கத்தால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னையில் பல்வேறு இடங்களில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டது.

மின் ஒயர் அறுந்து மின் சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், நேற்று பிற்பகலுக்குள் மின்சாரம் துண்டிக்கப்பட்ட இடங்களில் மீண்டும் மின்விநியோகம் வழங்கப்படும். சேதமடைந்த மின்கம்பங்கள் குறித்து மின்வாரியம் சார்பில் ஆய்வு நடத்தி வருகிறது. 100 சதவீதம் முழுமையாக மின் விநியோகம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். சென்னையில் மட்டும் மின்வாரிய ஊழியர்கள் சீரமைப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு மின்சாரத்துறை அமைச்சர் செந்தில்பாலாஜி வாக்குறுதி அளித்துள்ளார்.

# இலுப்பூர் அருகே ஆடு திருடிய 4 பேர் கைது ஆடுகள், டூவீலர் பறிமுதல்: போலீஸ் விசாரணை





**இலுப்பூர், டிச.11-** புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் மேலப்பட்டியை சேர்ந்தவர் மூர்த்தி. இவர் வீட்டில் ஆடு மாடுகளை வளர்த்து வருகிறார். இந்நிலையில் இவரது வீட்டில் கட்டியிருந்த ஆடுகளை காணவில்லை என இலுப்பூர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.

அது மட்டுமல்லாமல் கடந்த இரண்டு மாதமாக இலுப்பூர் காவல் நிலைய பகுதிக்குள் பல்வேறு ஆடுகள் தொடர்ந்து திருடப்பட்டது தொடர்பாக புகார்கள் வந்து கொண்டிருந்தது. கடந்த வாரம் மேலப்பட்டியை சேர்ந்த மூர்த்தி அளித்த புகாரின் பேரில் இலுப்பூர் போலீசார் தீவிர விசாரணை நடத்தி திருடர்களை தேடி வந்தனர்.

இந்நிலையில் மேலப்பட்டியில் ஆடுகளை திருடியது தொடர்பாக இலுப்பூர் ஊத்துக்காடு பகுதியை சேர்ந்த சாமியப்பன் மகன் மோகன்ராஜ் (20), மேலப்பட்டியை சேர்ந்த காளிமுத்து மகன் கார்மேகம் (25), சாலைப்பட்டியை சேர்ந்த பழனிசாமி மகன் பிரேம்குமார் (21), மெய்யக் கவுண்டன்பட்டியை சேர்ந்த நல்லுசாமி மகன் பிரபாகரன் (21), ஆகியோர் என தெரியவந்தது

இதையடுத்து 4 பேரை கைது செய்த போலீசார் அவர்களிடமிருந்து 4 ஆடுகள், மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவைகளை பறிமுதல் செய்தனர். பின்னர் ஆடு திருட்டு வழக்கில் கைது செய்ப்பட்ட வாலிபர்கள் நால்வர் மீதும் வழக்கு பதிவு செய்து, நீதிபதி முன் ஆஜார்படுத்தி சிறையிலடைத்தனர்.



அரியலூர் நகராட்சி ஆணையராக பணியாற்றிய சித்ரா சோனியா, தஞ்சாவூர் மாவட்டம், அதிராம பட்டினம் நகராட்சியின் ஆணையராக பணியிட மாற்றம் செய்யப்பட்டார். அதைத்தொடர்ந்து, அரியலூர் நகராட்சி பொறியாளராக பணியாற்றி வரும் தமயந்தி, அரியலூர் நகராட்சியின் பொறுப்பு ஆணையராக பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

# அரியலூர் அருகே லிங்கத்தடிமேடு வள்ளலார் கல்வி நிலைய மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி



**அரியலூர் டிச.11-** அரியலூர் அருகே, லிங்கத்தடிமேடு வள்ளலார் கல்வி நிலைய மாணவர்களுக்கு, திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டது.

இதுபற்றி பள்ளி தலைமை ஆசிரியர் சௌந்தர்ராஜன் வெளியிட்ட செய்தி குறிப்பு: அரியலூர் அருகே, லிங்கத்தடிமேடு வள்ளலார் கல்வி நிலைய, அரசு உதவி பெறும் நடுநிலைப் பள்ளியில், குழந்தைகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி, பள்ளி செயலாளர் புகழேந்தி தலைமையில் நடைபெற்றது.

தலைமை ஆசிரியர் சௌந்தர்ராஜன் வரவேற்றார். கோவை அரசு கலைக்கல்லூரி பேராசிரியர் மாலதி, ஓய்வு பெற்ற பொறியாளர் கலைமணி தேவி, அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சின்னதுரை ஆகியோர் மாணவ, மாணவிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தனர்.

மாணவ, மாணவிகள், தன்னை அறிதல், வாழ்க்கையில் ஏற்படும் இடர்பாடுகளை எவ்வாறு எதிர்கொள்வது?, சூழ்நிலைக்கு ஏற்ப முடிவு எடுக்கும் திறன் ஆகிய துறைகளில் பயிற்சி அளித்தனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை பள்ளி ஆசிரியர்கள் ஜெயா, நம்பியார், சரவணன், பிரேமா, தங்கமணி ஆகியோர் செய்திருந்தனர்.

# மாயமான பட்டினச்சேரி மீனவர் குடும்பத்திற்கு இழப்பீடு போக்குவரத்துத் துறை அமைச்சர் சந்திர பிரியங்கா உறுதி



**காரைக்கால், டிச.11-** புதுவை அரசு காரைக்கால் மாவட்டம் திருமலைராயன் பட்டினம் பட்டினச்சேரி மீனவ கிராமத்தை சேர்ந்த மீனவர் மணிகண்டன் மற்றும் சிவா ஆகியோர் கடந்த 5ம் தேதி அன்று மீன்பிடித்து விட்டு கரை திரும்பிய போது எதிர்பாராதவிதமாக படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதில், மணிகண்டன் மட்டும் கரை திரும்பிய நிலையில் சிவா என்ற 26 வயது மதிக்கத்தக்க மீனவரை கிடைக்க பெறாமலும் மற்றும் கரை திரும்பாத நிலையில் போக்குவரத்துத் துறை அமைச்சர் சந்திர பிரியங்காவை காரைக்கால் மாவட்டத்தை சேர்ந்த 11 மீனவ கிராம பஞ்சாயத்தார்கள் மற்றும் மீனவர்களின் உறவினர்கள் நேரில் சந்தித்து கடலில் காணாமல் போன மீனவரின் குடும்பத்திற்கு உரிய இழப்பீட்டை புதுவை முதல்வர் ரங்கசாமியிடம் பேசி பெற்று தருமாறு கோரிக்கை வைத்தனர்.

மேலும், இந்திய கடலோர காவல் படை மூலம் தேடுதல் வேட்டையை தீவிரப்படுத்தும்படியும் மீனவர்கள் அமைச்சரிடம் கோரிக்கை வைத்தனர். அமைச்சர் சந்திர பிரியங்கா, மாவட்ட நிர்வாகம் இதற்கு உரிய நடவடிக்கை எடுத்து வருவதாகவும், தேடுதலை தீவிரப்படுத்தி உரிய நடவடிக்கைஎடுக்கப்படும் எனவும், மீனவரின் குடும்பத்திற்கு உரிய இழப்பீட்டு தொகையை பெற்று தர நடவடிக்கை எடுப்பதாகவும் மீனவ பஞ்சாயத்தாரிடம் உறுதி அளித்தார்.

# தேவகோட்டை பள்ளியில் மாணவர்களுக்கு தொழுநோய் கண்டறிதல் விழிப்புணர்வு நிகழ்ச்சி



**சிவகங்கை, டிச.11-** சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு தொழுநோய் கண்டறிதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

ஆசிரியை முத்துலெட்சுமி வரவேற்றார். பள்ளி தலைமை ஆசிரியர் சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். தேவகோட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையை மருத்துவம் சாரா மேற்பார்வையாளர் ஜெபமாலைமேரி மாணவ, மாணவிகளை முற்றிலுமாக பரிசோதனை செய்து மாணவ, மாணவியரிடம் இந்நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

இது முற்றிலும் குணப்படுத்தக்கூடிய நோய் தான். இந்நோயை தடுக்க இளம்வயதுமுதலேசத்தான காய்கறிகள் ,கீரைகளை சாப்பிட வேண்டும். குறிப்பாக முருங்கை கீரை, பாசிப்பயிறு கூட்டுவைத்து சாப்பிட்டால் உடலுக்கு நல்லது. பிராய்லர் கோழி சாப்பிடுவதை இளம்வயது முதலே பெண் குழந்தைகள் தவிர்க்க வேண்டும். இளம் மாணவர்களாகிய நீங்கள் இந்நோய் தொடர்பான விழிப்புணர்வை உங்களை சுற்றி உள்ள அனைவரிடமும் சொல்லி இந்நோய் பரவமால் தடுக்க முயற்சி எடுங்கள் என தெரிவிக்கப்பட்டது.

தொழுநோய்தொடர்பான உறுதிமொழியைஅனைவரும் எடுத்துக்கொண்டனர். நிறைவாக ஆசிரியை செல்வமீனாள் நன்றி கூறினார்.

# பாதை இல்லாததால் ஆற்றைக்கடந்து சென்று இறந்தவர் உடலை அடக்கம் செய்யும் அவலம்



**தேனி, டிச.11-** தேனி அருகே நாகலாபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட சங்க கோணம்பட்டியில் ஏராளமான குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பை வாழ்வாதாரமாக கொண்டுள்ளனர்.

இந்த பகுதியைசேர்ந்தவர் ராமு என்ற விவசாயி உடல் நலக்குறைவால் உயிரிழந்தார். அவரின் உடலை கழுத்தளவு தண்ணீர் உள்ள வைகை ஆற்றை ஆபத்தான முறையில் கடந்து சென்று அடக்கம் செய்தனர். வைகை ஆற்றில் தண்ணீர் வரத்துள்ள போது விவசாயி பணிகளுக்கும், கால்நடைகளுக்கு தீவனம் கொண்டுவரவும், இதேபோல் இறந்தவர் உடலை அடக்கம் செய்வதற்கும் ஆபத்தான முறையிலேயே ஆற்றைக் கடந்து செல்லும் அவலம் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வருவதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து கிராம மக்கள் தெரிவித்ததாவது:

வைகை ஆற்றின் மேற்கு கரையில் சங்க கோணம்பட்டி கிராமம் அமைந்துள்ளது. இங்கு மண் அரிப்பு ஏற்பட்டு பாறை படிவமாக உள்ளதால் இறந்தவர் உடலை ஆற்றைக் கடந்து புறம்போக்கு நிலத்தில் அடக்கம் செய்து வருகிறோம். ஆற்றில் தண்ணீர் அதிகளவில் வரும்போது பல்வேறு சிரமங்களை சந்தித்து வருகிறோம். இதற்கு மாற்று வழியாக கண்டமனூர், அமச்சியாபுரம், வைகை ஆற்றுப்பாலம் வழியாக சுமார் 12 கி.மீ., தூரம் சுற்றி செல்ல வேண்டியுள்ளது. எனவே, சங்க கோணம்பட்டியில் ஆற்றை கடந்து செல்ல பாலம் அமைத்துத்தர வேண்டும்.

இவ்வாறு கிராம மக்கள் தெரிவித்தனர்.

### மாமல்லபுரம் அருகே கடந்த ‘மாண்டஸ்’ புயலால் பலத்த சேதம்

# ரூ.700 கோடி !

## சென்னை கணக்கெடுப்பில் முதற்கட்ட தகவல் வெளியானது
## நிவாரண நடடிக்கைகளில் தமிழக அரசு களமிறங்கி அசத்தல்!





**சென்னை, டிச.11- ‘மாண்டஸ்’ புயல் காரணமாக சென்னையில் ரூ.700 கோடி மதிப்பிலான சேதம் ஏற்பட்டுள்ளதாக முதல் கணக்கீட்டின்படி தெரியவந்துள்ளது. தமிழக அரசு முன்னெச்சரிக்கையாக நிவாரண நடவடிக்கை எடுத்ததன் பலனாகவும், முதல்வர் நேரில் ஆய்வு செய்ததாலும், கே.என். நேரு, சேகர்பாபு உள்ளிட்ட அமைச்சர்களாலும், ஐ.ஏ.எஸ்., அதிகாரிகளாலும் அதிக உயிர்ச்சேதம் ஏற்படவில்லை.**

சென்னையை அடுத்த மாமல்லபுரம் அருகே ‘மாண்டஸ்’ புயல் கரையை கடந்தது. இதனால், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் பலத்த காற்றுடன் மழை பெய்தது. புயலால் ஏற்படும் பாதிப்புகளை உடனடியாக சீரமைக்க வசதியாக, சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, துணை மேயர் மகேஷ்குமார், கமிஷனர் ககன்தீப் சிங் பேடி, தலைமை பொறியாளர் ராஜேந்திரன், துணை கமிஷனர்கள் உள்ளிட்டோர் விடிய, விடிய களப்பணியில் ஈடுபட்டனர்.

சென்னையில் 15 செ.மீ.,க்கு அதிகமாக மழைபெய்த நிலையிலும், பெரும்பாலான சாலைகளில் மழைநீர் தேக்கம் ஏற்படவில்லை. ஆனால், புயல்காரணமாக சென்னையில் பலத்த காற்று வீசியது. இதனால், 400-க்கும் மேற்பட்ட மரங்கள் வேரோடு சாய்ந்தன. மேலும், 200க்கும் மேற்பட்ட மரக்கிளைகளும் விழுந்தன. 150க்கும் மேற்பட்ட தெரு மின் கம்பங்கள், 200க்கும் மேற்பட்ட சாலைகள், 15க்கும் மேற்பட்ட பேருந்து நிறுத்தங்கள் உள்ளிட்டவை சேதம் அடைந்தன.

சென்னை மாநகராட்சி மற்றும் காவல் துறை என 50,000-க்கும் மேற்பட்டோர் களப்பணியில் ஈடுபட்டனர். இதன் காரணமாக, சாலையில் விழுந்த மரங்கள், போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத வகையில் உடனடியாக அகற்றப்பட்டன. எனவே, மாநகரப் பேருந்துகள், வாகனங்கள் நேற்று (டிச.10) வழக்கம் போல் இயக்கப்பட்டன.

இது குறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறுகையில், "சென்னையில் சேதம் மதிப்பாக 700 கோடி ரூபாய் முதற்கட்டமாக கணக்கிடப்பட்டுள்ளது. ஓரிரு நாட்களுக்கு பின், மொத்த சேத மதிப்பு கணக்கிடப்பட்டு, அரசுக்கு சமர்ப்பிக்கப்படும். சேதமடைந்த பகுதிகளில் உடனடி சீரமைப்பு பணிகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது வரை 400 மரங்கள் விழுந்ததாக கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், சில இடங்களில் கணக்கில் வராமல் இருக்கலாம். அவற்றை கணக்கிடும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது" என்றார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று தலைமை செயலகத்தில், தமிழகத்தில் மாண்டஸ் புயலால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும், தொடர்ந்து எடுக்கப்பட வேண்டிய நிவாரண நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனை மேற்கொண்டார். இக்கூட்டத்தில் தலைமை செயலாளர் இறையன்பு, புயல் மழையால் ஏற்பட்ட சேத விவரங்கள் மற்றும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைத்தார். இக்கூட்டத்தில் அமைச்சர்கள் துரைமுருகன், கே.என். நேரு, பி.கே. சேகர்பாபு, அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை, பட்டினப்பாக்கம். சீனிவாசபுரத்தில் அமைந்துள்ள மின் மாற்றியை பழுது பார்க்கும் பணியினை மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது, மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, மயிலாப்பூர் எம்.எல்.ஏ., வேலு, இயக்குநர், பகிர்மானம் சிவலிங்கராஜன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## பூம்புகார் பகுதியில் தூண்டில் வளைவு
## பா.ஜ., மாவட்ட செயலாளர் வாக்குறுதி



**மயிலாடுதுறை, டிச.11-** மாண்டஸ் புயல் காரணமாக ஏற்பட்ட கடல் சீற்றத்தால் பூம்புகார் பகுதியில் பல இடங்களில் சேதம் ஏற்பட்டுள்ளது. மேலும் தூண்டில்வளைவுசரியாக இல்லாததால் கடல் நீர் துறைமுகத்தில் உள்ளே புகுந்துள்ளது. அலையின் வேகம் அதிகமாக இருந்த காரணத்தால் பல்வேறு இடங்களில் படகுகள் ஒன்றுடன் ஒன்று மோதி பலத்த சேதம் அடைந்துள்ளது

இந்நிலையில், சேதம் அடைந்த பகுதிகளை பா.ஜ.க., மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் அகோரம் பார்வையிட்டார். அப்போது தூண்டில் வளைவு அமைப்பதற்கு மத்திய அரசு நிதி தேவைப்படுகிறது என மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அதற்கு பதிலலித்த அவர், மத்திய அரசின் நிதி தேவைப்படும் பட்சத்தில், அதனை பா.ஜ.க., மாநில தலைவர் அண்ணாமலையிடம் கூறிநிதியைப்பெற்றுத்தர நடவடிக்கைஎடுக்கப்படும் என தெரிவித்தார்.

## மாற்றுத்திறனாளி பாதை விரைவில் சீரமைப்பு
## அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு உறுதி!



**சென்னை, டிச.11-** ‘‘மாண்டஸ் புயலால் சேதமடைந்த சென்னை மெரினா கடற்கரையில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மரப்பாதை விரைவில் சீரமைக்கப்படும்,” என்று இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு தெரிவித்தார்.

மாண்டஸ் புயல் நிவாரணப் பணிகள் குறித்து அமைச்சர் சேகர்பாபு செய்தியாளர்களை சந்திப்பில் தெரிவித்ததாவது:

சென்னை மெரினா கடற்கரையில் மாற்றுத் திறனாளிகளுக்காக அமைக்கப்பட்ட சிறப்புப் பாதை சேதமடைந்துள்ளது. இயற்கை சீற்றத்தினால் இது நடந்துள்ளது. மெரினா கடற்கரை பகுதியில் கான்க்ரீட் அமைப்புகளுக்கோ, இரும்புப்பொருட்களைப் பயன்படுத்தி கட்டமைப்புகளை உருவாக்க அனுமதி இல்லை. அதனாலேயே மரப்பாதை அமைக்கப்பட்டது. எதிர்காலத்தில் இன்னும் வலுவான பாதையை அமைக்க நிபுணர் குழு அமைத்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும். இப்போது சேதமடைந்த பாதை இன்னும் 2, 3 நாட்களில் சீரமைக்கப்பட்டு மாற்றுத்திறனாளிகள் மீண்டும் கடலையும், கடற்கரையையும் நாடும்படி செய்ய முதல்வர் நடவடிக்கை எடுப்பார் என்று நம்பிக்கையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் சேகர்பாபு தெரிவித்தார்.

நிவாரண முகாம்கள் பற்றி அவர் கூறுகையில், "முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னை முழுவதும் 41 நிவாரண முகாம்கள் ஏற்படுத்தியிருந்தோம். ஆனால், வட சென்னையில் 2 முகாம்களில் குறைந்த அளவிலேயே மக்கள் தங்கவைக்கப்பட்டனர். அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. முதல்வர் தனக்கு வாக்களித்த மக்கள் மன நிறைவு பெறும் வகையில், வாக்களிக்காதவர்கள் இவருக்கு நாம் வாக்களிக்காமல் விட்டுவிட்டோமே என்று ஏங்கும் வகையில் தான் எல்லாப் பணிகளையும் செய்து வருகிறார். புயல் நிவாரணப் பணிகளும் அப்படித்தான் செய்து வருகிறார்," என்றார்.

## புதுக்கோட்டை ஜெ.ஜெ.கல்லூரியில்
## முன்னாள் மாணவர் சந்திப்பு நிகழ்ச்சி




**புதுக்கோட்டை, டிச.11-** புதுக்கோட்டை, சிவபுரம். ஜெ.ஜெ.கல்லூரியில் முன்னாள் மாணவர் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

கணிதத்துறை முன்னாள் மாணவர் சந்திப்பு நிகழ்ச்சியானது நேற்று காலை நடைபெற்றது இதில் 105 முன்னாள் மாணவர்கள் கலந்து கொண்டு. தாங்கள் இங்கு மாணவர்கள் பருவத்தில் பயின்றபோது தங்களின் கல்லூரி நாட்களின் நிகழ்வுகளையும்எதிர்கால வேலை வாய்ப்புகள் மற்றும் பணிபுரியும் துறையில் கணிதத்தின் பங்குகள் பற்றியும் ஒருவருக்கொருவர்பகிர்ந்து கொண்டு மகிழ்ந்தனர். உதவி பேராசிரியர்கள் மீனாள், கலைச்செல்வி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.

துறைத் தலைவர் பிரியதர்ஷினி சிறப்புரையாற்றினார். உதவி பேராசிரியர்கள் சந்தோஷ் குமார் விழாவை தொகுத்து வழங்கினார், அருண் நன்றி உரையாற்றினார். தாங்கள் பயின்ற கணிதத் துறையின் மேம்பாட்டிற்காகமுன்னாள் மாணவர் சங்கத்தின் சார்பாக சிறுத்தொகை காசோலையாக வழங்கப்பட்டது.

## கொள்ளிடம் அருகே மீனவ கிராமத்தில்
## உடைந்த பாலத்தை அதிகாரிகள் ஆய்வு



**கொள்ளிடம், டிச.11-** மயிலாடுதுறைமாவட்டம் கொள்ளிடம்அருகேஉள்ள கொடியம்பாளையம் தீவு கிராமத்தில் உள்ள குடியிருப்பு பகுதிக்குள், அங்குள்ள மதகின் அடிப்பகுதியில் உள்ள குழாய் உடைந்ததால் கடல் நீர் உள்ளே புகும் சூழ்நிலை ஏற்பட்டது. இதுகுறித்து தகவல் அறிந்த சீர்காழி எம்.எல்.ஏ., பன்னீர்செல்வம், ஒன்றியக்குழு தலைவர் ஜெயப்பிரகாஷ், ஒன்றிய ஆணையர் ரெஜினாராணி, பி.டி.ஓ., அருள்மொழி, ஒன்றிய பொறியாளர் பூர்ணசந்திரன் மற்றும் அதிகாரிகள், ஊழியர்கள் கொடியம்பாளையம் கிராமத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்

பின்னர் உடனடியாக உடைந்தகுழாய்பகுதியை குடியிருப்புக்குள்தண்ணீர் புகாதவாறு அடைத்து சரி செய்யும்படி எம்.எல்.ஏ., பன்னீர்செல்வம் அதிகாரிகளை கேட்டுக்கொண்டார். தொடர்ந்து குழாயை சரி செய்யும் பணி உடனடியாக நடைபெறும் என்று அதிகாரிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

## ஆலங்குடி அருகே கூட்டுறவு பால் கேட்டு மக்கள் முற்றுகை!





**ஆலங்குடி, டிச.11-** ஆலங்குடி அருகேயுள்ள கீரமங்கலத்தில் கடந்த 48 ஆண்டுகளாக பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் செயல்பட்டு வருகிறது. இதில், அப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் வீடுகளுக்கு ஊற்றிய பால் போக மீதமுள்ள பாலை ஆவின் கொள்முதல் நிலையத்திற்கு அனுப்பி வருகின்றனர்.

இந்நிலையில், கீரமங்கலம் பால் உற்பத்தியாளர் சங்கத்தில் நாளொன்றுக்கு சராசரியாக 1,800 லிட்டர் வரை கொள்முதல் செய்யப்படுகிறது. இதில், 60 சதவீதம் பால் அப்பகுதியிலேயே விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில், டிச.1ம் தேதியிலிருந்து கூட்டுறவு சங்கங்களில் கொள்முதல் செய்யப்படும் பாலில், 10 சதவீதம் மட்டுமே உள்ளூரில் விற்பனை செய்ய வேண்டும். மீதமுள்ள 90 சதவீதபாலை ஆவின் நிலையத்திற்கு அனுப்ப வேண்டும். மீறினால் கூட்டுறவு சங்க செயலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அனைத்து பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கும் ஆவின் நிர்வாகம் சார்பில் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், கீரமங்கலம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கத்தில், பால் விற்பனையை நிறுத்தியதால் மக்கள் அவதியடைந்தனர். இதனால், ஆத்திரமடைந்த மக்கள் சங்கத்தை முற்றுகையிட்டனர்.

இது குறித்து, தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த கீரமங்கலம் போலீசார் மற்றும் புதுக்கோட்டை பால்வளத்துறை முதுநிலை ஆய்வாளர் திருப்பதி ஆகியோர் மக்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். அப்போது, வீடுகளுக்குபால்விற்பனை செய்யலாம் என்றும், வியாபாரிகளுக்கு விற்பனைசெய்யக்கூடாது என்றும் கூறினார்.

இதைத்தொடர்ந்து, மக்களுக்குபால்விற்பனை செய்யப்பட்டது. இதனால், அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# மாண்டஸ் புயலால் தரங்கம்பாடி மீன்பிடி துறைமுக தடுப்புச்சுவர் பாதிப்பு



**தரங்கம்பாடி, டிச.11-** மயிலாடுதுறைமாவட்டம் தரங்கம்பாடியில் மீனவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று கடந்த 2019ம் ஆண்டு அ.தி.மு.க., ஆட்சியில் ரூ.120 கோடி நிதி ஒதுக்கப்பட்டு மீன்பிடித் துறைமுகம் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.

மீனவர்கள் படகுகளைபாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்காக 1,070 மீட்டர் தூரம் 15 அடி உயரம், 6 மீட்டர் அகலத்தில் தூண்டில் வளைவு அமைக்கப்பட்டு 90 சதவீத பணிகள் நிறைவடைந்துள்ளன. கடந்த 2020ல் ஏற்பட்ட புயலின் போது தூண்டில் வளைவுக்காக கொட்டப்பட்டிருந்த கருங்கல் தடுப்புச்சுவரின் ஒரு பகுதி சேதம் அடைந்தது.

இந்நிலையில் மீனவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 20 அடி உயரத்தில் 15 அடி அகலமுடன் கூடுதலாக ரூ.70 கோடி நிதி ஒதுக்கப்பட்டு மொத்தம் ரூ.190 கோடி மதிப்பீட்டில் தூண்டில் வளைவுடன் கூடிய மீன்பிடி துறைமுக பணிகள்இறுதிகட்டத்தை எட்டியுள்ளது.

தற்போது கரையைக் கடந்த மாண்டஸ் புயல் காற்று மற்றும்கடல்சீற்றம் காரணமாகதரங்கம்பாடி மீனவதுறைமுகதூண்டில் வளைவு சேதமடைந்தது. கருங்கற்களால் ஆன 20 அடி உயரம் உள்ள தடுப்புச்சுவர் மீது 6 மீட்டர் அகலத்தில் அமைக்கப்பட்டுள்ள கான்கிரீட் பாதை கடல் சீற்றம் காரணமாக பல்வேறு இடங்களில் விரிசல் ஏற்பட்டு உள்வாங்கியுள்ளது. கருங்கல்லால் ஆன தடுப்பு சுவரில் மண் கொண்டு நிரப்பப்பட்டு மேலே கான்கிரீட் போடப்பட்டுள்ளதால் அலை வேகத்தில் கருங்கல்லில் சரிவு ஏற்பட்டதன் காரணமாக சமதளத்தில் இருந்த கான்கிரீட் பாதையானது உள்வாங்கியுள்ளது.

மேல் மட்ட விளிம்பு பகுதிகள் கடல் அரிப்பினால் சேதமடைந்துள்ளது. அதிகாரிகள் சரிவர கண்காணிக்காத காரணத்தால் கட்டுமான பணியில் குறைபாடு ஏற்பட்டுள்ளதாகமீனவர் கிராம மக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

இந்நிலையில், தமிழக அரசு போர்க்கால நடவடிக்கை எடுத்து தூண்டில் வளைவில் சேதமடைந்த பகுதிகளை மறு சீரமைப்பு செய்ய வேண்டும் என்று மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் பாதிப்பு தவிர்ப்பு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் !

**சென்னை, டிச.11-** சென்னை கிழக்கு கடற்கரைசாலைபகுதியில் உள்ள கொட்டிவாக்கம், ஈஞ்சம்பாக்கம் உள்ளிட்ட பல இடங்களுக்கு நேரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்றார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்ததாவது:

மாண்டஸ் புயல் காரணமாககட்டுப்பாட்டு அறைக்கு நேரில் சென்று என்ன நிலைமை என்று ஆய்வு செய்தேன். புயல் எங்கு அதிகம் வரும்? எந்த மாவட்டத்தில் அதிக மழை பெய்யும் என்பதை அறிந்து அந்தந்த மாவட்ட கலெக்டர்களிடம் காணொலி மூலம் நேரடியாக பேசி விவரங்களை அறிந்து கொண்டேன். அதற்கு பிறகு விடிய விடிய ஒவ்வொரு கலெக்ரிடமும் என்ன நிலைமை?, எப்படி இருக்கிறது? என்று கேட்டேன்.

மாமல்லபுரம் அருகே புயல் கடப்பதை அறிந்து அந்த மாவட்ட கலெக்டரிடம் அரை மணி நேரத்துக்கு ஒரு முறை நான் தொடர்பு கொண்டு பேசினேன். தென் சென்னை பகுதியில் கொட்டிவாக்கம், ஈஞ்சம்பாக்கம் பகுதியில் பாதிக்கப்பட்ட மீனவர்கள் பகுதிக்கு சென்று அந்த மக்களையும் சந்தித்து ஆறுதல் சொல்லிவிட்டு அவர்களுக்கான நிவாரண உதவிகளையும் செய்தேன். இப்போது வட சென்னையில் இருக்கும் காசிமேடு பகுதியில் ஆய்வு செய்துள்ளேன்.

மாண்டஸ் புயல் தாக்குதலில் இருந்து தமிழகம் அதிலும்குறிப்பாக சென்னை முழுமையாக மீண்டு இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அரசு எடுத்த முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாகத்தான்பாதிப்பு தடுக்கப்பட்டுள்ளது. அரசு ஊழியர்களின் அர்ப்பணிப்பு, செயல்பாடுகளின் காரணமாக மக்கள் முழுமையாக பாதுகாக்கப்பட்டு இருக்கிறார்கள். கே.என். நேரு, சேகர்பாபு, மா.சுப்பிரமணியன் உள்ளிட்ட அமைச்சர்கள், எம்.எல்.ஏ.,க்கள், எம்.பி.,க்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மேயர்கள், துணை மேயர்கள், கவுன்சிலர்கள், மாநகராட்சி அதிகாரிகள், மாநகராட்சி ஊழியர்கள், மின்சார ஊழியர்கள், போலீசார், தீயணைப்பு படை வீரர்கள், தூய்மை பணியாளர்கள் முழுமையாக தங்களை இதில் ஈடுபடுத்திக் கொண்டு நிவாரண பணிகளில் ஈடுபட்டது பாராட்டுக்குரியது.




அதற்காக நான் முதல்வர்என்றமுறையிலும் அரசின் சார்பிலும், வணக்கத்தை, நன்றியை, பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன். சென்னையில் 17 ஐ.ஏ.எஸ்., அதிகாரிகள் இந்த பணியை சிறப்பாக செய்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 25 ஆயிரம் பணியாளர்கள் பணியில் முழுமையாக ஈடுபட்டுள்ளனர்.

கடந்த24மணிநேரத்தில் 37 மாவட்டங்களில் மழை பொழிவு ஏற்பட்ட நிலையில் மாநில சராசரி 20.08 மில்லி மீட்டராகும். குறிப்பாக சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, ராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்துள்ளது. இவ்வளவு அதிகமான மழை பெய்திருந்தாலும் பெருமளவு சேதம் ஏற்படாமல் இந்த அரசு தடுத்து இருக்கிறது.

மக்களை பாதுகாப்பாக தங்க வைக்க முன்பே நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு 3,163 குடும்பங்களை சேர்ந்த 9,130 நபர்கள் தங்க வைக்கப்பட்டனர். தேசிய பேரிடர் மீட்பு படை மற்றும் தமிழ்நாட்டு பேரிடர் மீட்பு படை 496 வீரர்கள் அடங்கிய 14 குழுக்கள் பல்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு கடமையை செய்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்தில் செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் மீட்பு பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பலத்த காற்றின் காரணமாக மின் கம்பங்கள், மின் கடத்திகள் சேதம் அடைந்திருக்கிறது. அதன் காரணமாக மக்கள் பாதுகாப்பிற்காக 600 இடங்களில்மின்இணைப்பு துண்டிக்கப்பட்டு இருக்கிறது. தற்போது வரை 300 இடங்களில் சீர் செய்யப்பட்டு இருக்கிறது. மீதமுள்ள பணிகளும் துரிதமாகநடந்துவருகிறது. மக்கள் திருப்தியாக இருக்கிறார்கள். இவ்வாறு முதல்வர் தெரிவித்தார்.

ஆய்வின் போது, அமைச்சர்கள் கே.என். நேரு, சேகர்பாபு, மேயர் பிரியா, துணை மேயர் மகேஷ்குமார், எம்.எல்.ஏ.,க்கள் எபினேசர், ஐட்ரீம் மூர்த்தி, மண்டல தலைவர் நேதாஜி கணேசன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# அதிதீவிர புயல் வலுவிழந்து புயலாக மாறியதால் பெரிய பாதிப்பில் இருந்து தப்பியது மாமல்லபுரம் !





**சென்னை,டிச.11-** புயல் கரையை கடந்தபோது காற்று வேகமாக வீசிய போதிலும் அரசின் முன்னேற்பாடுகளால் பெரிய பாதிப்பில் இருந்த மாமல்லபுரம் தப்பியுள்ளது. கிழக்கு கடற்கரை சாலையில் நள்ளிரவில் போக்குவரத்தை நிறுத்திய போலீசார் யாரையும் கடற்கரை பகுதிக்கு அனுமதிக்கவில்லை.

மாண்டஸ்புயல்தீவிர புயலாக இருந்து பின்னர் வலுவிழுந்தது. இதனால் கரையை கடந்தபோது புயலாகவே கரையை கடந்தது. தீவிர புயலாக கரையை கடந்ததால் 100 கி.மீ.,க்கும் அதிகமாக காற்று வீசும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அப்படி காற்று வீசினால் பாதிப்பு அதிகமாக இருக்கும் என்றும் கணிக்கப்பட்டிருந்தது.

புயல் கரையை கடந்தபோது காற்று வேகமாக வீசிய போதிலும் அரசின் முன்னேற்பாடுகளால் பெரிய பாதிப்பில் இருந்து மாமல்லபுரம் தப்பியுள்ளது. முன் கூட்டியே உயரமான இடத்தில் உள்ள பெயர் பலகைகளை கண்டறிந்து அவைகளை அப்புறப்படுத்தியதுடன், மாமல்லபுரம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் மக்களையும் பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்தனர்.

கிழக்கு கடற்கரை சாலையில் நள்ளிரவில் போக்குவரத்தை நிறுத்திய போலீசார் யாரையும் கடற்கரை பகுதிக்கு அனுமதிக்கவில்லை. இப்படி முன் கூட்டியே அரசு நிர்வாகம் முழு வீச்சில் களம் இறங்கியதாலும், நள்ளிரவில் புயல் கரையை கடந்ததாலும் சென்னை மாநகரும் பாதிப்பில் இருந்து தப்பியது குறிப்பிடத்தக்கது.




| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs. 5,055 | Rs. 5,457 |




▶ வேலூர் மாநகராட்சி மாங்காய் மண்டியில் மாண்டஸ் புயல் மழையினால் பாதிக்கப்பட்ட இடங்களை மாவட்ட ஆட்சியர் குமாரவேல் பாண்டியன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பாதிக்கப்பட்ட இடங்களில் மழைநீரை வெளியேற்றி பொது சுகாதாரம் உறுதிபடுத்த அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். தேங்கிய மழைநீர் உடனடியாக வெளியேற்றப்பட்டது. ஆய்வின் போது மேயர் சுஜாதா ஆனந்தகுமார், ஆணையர் அசோக்குமார், வருவாய் கோட்டாட்சியர் பூங்கொடி, பொதுமக்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்

# திருவண்ணாமலை மாவட்டம் வெம்பாக்கத்தில் அதிகட்சமாக 25 செ.மீ., மழை கொட்டித்தீர்த்தது





**திருவண்ணாமலை, டிச.11-** தமிழகத்தில் மாண்டஸ் புயல் கோர தாண்டவமாகி சென்னையை கடந்தது. இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். தமிழகத்தில் அதிகபட்சமாக திருவண்ணாமலை மாவட்டம் வெம்பாக்கத்தில் 25 செ.மீ., மழை பெய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

வங்கக் கடலில் ஒரு புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது. இந்த தாழ்வு பகுதி, தாழ்வு மண்டலமாகவும், புயலாகவும் வலுவடைந்தது. இதற்கு 'மாண்டஸ்' என்று பெயரிடப்பட்டது. இந்தாண்டு வடகிழக்கு பருவமழையின் முதல் புயல் இது ஆகும். இது கடும் புயலாக வலுப்பெற்ற நிலையில், தீவிர புயலாகவும் மாறி தமிழகத்தை அச்சுறுத்தியது.

தொடர்ந்து வங்க கடல் பகுதியில் நேற்று காலை வரை நிலைக்கொண்டு இருந்தது. இதன் காரணமாக, தமிழகத்தில் வட கடலோர மாவட்டங்கள் உள்பட மாநிலத்தின் பல பகுதியில் கன முதல் மிக கனமழை வரை பெய்யும் என்று ஆய்வு மையம் தெரிவித்தது.

அதன்படி, தமிழகத்தின் வட கடலோர மாவட்டங்கள் உள்படசில இடங்களில் மழை பெய்தது. அதிகபட்சமாக சென்னையில் மட்டும் 7 செ.மீ., என்ற அளவில் கனமழை பதிவாகியிருந்தது. புயல் மற்றும் கனமழை காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, தமிழ்நாட்டில் 26 மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டன.

தமிழகத்தில் அதிகபட்சமாக திருவண்ணாமலை வெம்பத்தூரில் 25 செ.மீட்டர் மழை பெய்துள்ளது. அடுத்தபடியாக ராணிப்பேட்டை பணம்பாக்கத்தில் 20 செ.மீ., ஆவடியில் 17 செ.மீ., அயனாவரம், குன்றத்தூரில் 15 செ.மீ., பெரம்பலூர் 14 செ.மீ., மகாபலிபுரம், சோழவரம் 13 செ.மீ., மழை பெய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் மழையால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அமைச்சர்கள் சேகர்பாபு, கே.என்.நேரு மற்றும் அரசு அதிகாரிகளுடன் நேரில் சென்ற முதல்வர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் தெரிவித்து உதவிகள் வழங்கியதுடன் பாதிக்கப்பட்ட இடங்களை உடனே சீரமைக்குமாறு அதிகாரிகளுக்கு உடனுக்குடன் உத்தரவிட்டார்.

# மாண்டஸ் புயலால் கடல் சீற்றம்: மெரினா க்ளீன் !



**மெரினா, டிச.11** சென்னையில் மாண்டஸ் புயலின் தாக்கத்தால் மெரினா கடலில் மிதந்த குப்பைகளை மாண்டஸ் புயல் அகற்றி சுத்தப்படுத்தி உள்ளதால் பொதுமக்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

சென்னை மெரினாவில் கடுமையான கடல் சீற்றம் காணப்பட்டதால் பல அடி உயரத்துக்குஎழும்பிய ராட்சத அலைகள், கடலின் மேற்பரப்பில் பரவிக்கிடந்த மது பாட்டில்கள், தண்ணீர் பாட்டில்கள் உள்ளிட்ட குப்பை கூளங்களை வாரி சுருட்டி கரைக்குகொண்டு வந்துள்ளது. இந்த குப்பைகள் அனைத்தும் தற்போது மெரினா சர்வீஸ் சாலையில் குவிந்து கிடக்கின்றன. இதை அகற்றி அப்புறப்படுத்தும் பணியில் மாநகராட்சி ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

மெரினா கடற்கரை பகல் மற்றும் இரவு நேரங்களில் திறந்தவெளி பாராக குடிமகன்களின் கூடாரமாக செயல்பட்டு வருவது இதன் மூலம் உறுதியாகி இருக்கிறது. கடலில் மிதந்து புயலால் கரை ஒதுங்கியுள்ள கணக்கில் அடங்காத மதுபாட்டில்களே இதற்கு சாட்சியாக உள்ளன.

எனவே, வரும் காலங்களில் மெரினாவில் மது குடித்து கும்மாளம் அடிப்பவர்களை போலீசார் அடக்க வேண்டும் என்கிற கோரிக்கையும் எழுந்துள்ளது. மெரினா கடல் பகுதி முழுவதும் தண்ணீர் தேங்கி கடற்கரை மணல் பரப்பும் கடல் போலவே காட்சி அளித்துக் கொண்டிருக்கிறது. சர்வீஸ் சாலையிலும் தண்ணீர் தேங்கியுள்ளது.

வேகம் காட்டிய மெண்டஸ் சூறாவளி காற்றால் மெரினாவில் உள்ள கடைகளும் சேதம் அடைந்துள்ளன. இதையடுத்து கடைகளில் இருந்த பொருட்களை வியாபாரிகள் தேடி எடுத்தனர். இதேபோன்று பெசன்ட் நகர் கடற்கரை பகுதியும் காணப்பட்டது. பெசன்ட் நகர் சர்வீஸ் சாலை முழுவதும் கடற்கரை மணல் குவிந்து கிடந்ததை காண முடிந்தது.



▶ செங்கல்பட்டு மாவட்டத்தில் மாண்டஸ் புயல் காரணமாக செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட செயலாளர் திருக்கழுக்குன்றம் ஆறுமுகம், திருப்போரூர் வடக்கு ஒன்றிய செயலாளர், தையூர் ஊராட்சி மன்ற தலைவர் தையூர் குமரவேல், கானத்தூர் ஊராட்சி கடற்கரை பகுதியை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, அங்கு தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு உணவு மற்றும் நிவாரண பொருட்களை வழங்கி மக்கள் எந்த வகையிலும் பாதிப்பு அடையாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினர்.

# குத்தாலம் மேற்கு ஒன்றியத்தில் தி.மு.க.,வில் 50 பேர் ஐக்கியம்



**குத்தாலம், டிச.11-** மயிலாடுதுறைமாவட்டம், குத்தாலம் மேற்கு ஒன்றியம், எழுமகலூர் ஊராட்சி, ஏ.கிளியனூர் பகுதியைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் மாற்றுக் கட்சியில் இருந்து விலகி தி.மு.க.,வில் குத்தாலம் மேற்கு ஒன்றிய செயலாளர் ராஜா தலைமையில் மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க., செயலாளர் நிவேதா முருகன் முன்னிலையில் இணைத்துக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட தி.மு.க., அவைத்தலைவர் சீனிவாசன், முன்னாள் சட்டமன்றஉறுப்பினர்கள் சத்தியசீலன், விஜயபாலன, குத்தாலம் அன்பழகன், மாவட்ட தி.மு.க., துணைச்செயலாளர் செல்வமணி, ஒன்றிய செயலாளர்கள் மங்கை சங்கர், வைத்திய நாதன், இமையநாதன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் ரவி, மகேந்திரன், ஒன்றிய துணைச்செயலாளர் முருகன் மற்றும் தி.மு.க., நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

# சென்னை காசிமேட்டில் 150 படகுகள் கடும் சேதம் பல கோடி ரூபாய் இழப்பு: மீனவர்கள் வேதனை!



**சென்னை, டிச.11-** சென்னை காசிமேடு கடற்கரையில் விசைப்படகுகள் புயலால் பாதிக்கப்பட்டுள்ளன. கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் 1000-க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் 150-க்கும் மேற்பட்ட படகுகள் புயலின்வேகத்தால்பயங்கர சத்தத்துடன் ஒன்றோடு ஒன்று மோதி உடைந்து சேதமடைந்துள்ளன. மேலும்50-க்கும்மேற்பட்ட விசைப்படகுகள் நீரின் உள்ளே மூழ்கியுள்ளன.

முன் கூட்டியே மீனவர்கள் எச்சரிக்கை யோடு இருந்தாலும் கூட பெரியவகைவிசைப்படகை கரைக்கு ஏற்றுவது கடினமாக இருந்ததால் கடலின் கரையிலேயே நிறுத்தினர். புயலின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் படகுகள் சேதம் ஏற்பட்டுள்ளது. மீன்வளத்துறைஅதிகாரிகள் வந்து பார்வையிட்ட பின்னர்தான் படகுகளின் சேதம் குறித்த முழு விபரங்கள் தெரியவரும்.

இதுகுறித்துவிசைப்படகு உரிமையாளர்கள் கூறும்போது, கடல் மிகுந்த சீற்றத்துடன் காணப்பட்டது. இதையடுத்து நாங்கள் எங்களதுவிசைப்படகுகள் ஒன்றோடு ஒன்று மோதாமல்இருப்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கயிறு கட்டி பாதிப்பு ஏற்படாதவாறு நிறுத்தி வைத்தோம். ஆனால், புயல் கரையை கடக்கும் இரவுநேரம்செல்ல,செல்ல பயங்கர சத்தத்துடன் விசைப்படகுகள் ஒன்றோடு ஒன்று மோதுவதை எங்களால் தடுக்க முடியவில்லை.

தற்பொழுதுநீரில்உள்ள ஒருவிசைப்படகின்விலை ரூ.30 லட்சம் முதல் ரூ.80 லட்சம்ஆகும். சேதமடைந்த விசைப்படகுகளை சரி செய்ய பல லட்ச ரூபாய் செலவாகும். இதனால் மீனவர்கள் ஆகிய எங்களுக்கு பல கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. தமிழக அரசுமுறையாககணக்கீடு எடுத்து எங்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்என கோரிக்கை வைத்தனர்.



▶ காரைக்காலில் பட்டினம் எம்.எல்.ஏ., நாக தியாகராஜன் கடலுக்கு மீன் பிடிக்க சென்று கரை திரும்பும் போது படகு விபத்து ஏற்பட்டு நீரில் மூழ்கி காணாமல் போன பட்டினச்சேரி மீனவ கிராமத்தைச் சேர்ந்த மீனவர் சிவா குடும்பத்திற்கு தகுந்த இழப்பீடு வழங்குவது பற்றி காரை மாவட்ட ஆட்சியர் முகம்மது மன்சூருடன் ஆலோசனை மேற்கொண்டார். மேலும் முதல்வரை சந்தித்து மீனவர் சிவா குடும்பத்திற்கு தகுந்த இழப்பீடு பெற்றுத்தருவதாக வாக்குறுதி அளித்தார்.

# அவ்வப்போது பெய்துவரும் சாரல் மழையில் நனைந்தபடி திற்பரப்பு அருவியில் சுற்றுலா பயணிகள் ஆனந்த குளியல்



குமரி, டிச.11 - மலையோரப்பகுதிகளில் பெய்த மழையின் காரணமாகபேச்சிப்பாறை அணையின் நீர்வரத்து அதிகரித்ததால் கடந்த 6-ம்தேதி ஆயிரம் கன அடி உபரிநீர் மறுகால்வழியாக திறந்துவிடப்பட்டது.இந்த உபரிநீரும்,கோதையாற்று தண்ணீரும் சேர்ந்ததால் திற்பரப்பு அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. தொடர்ந்து மழைய் பெய்யாவிட்டாலும் அருவியில் தண்ணீர்வரத்து குறையவில்லை.இதனால் வெள்ளிக்கிழமை வரை திற்பரப்பு அருவியில் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டது. இதனால் அருவிக்கு குளிக்க வந்த சுற்றுலா பயணிகள் ஏமாற்றமுடன் திரும்பிச்சென்றனர்.

இந்நிலையில் பேச்சிப்பாறைஅணையில் தண்ணீர்வரத்து குறைந்ததால் உபரிநீர் திறந்து விடப்படுவது நிறுத்தப்பட்டது. இதனால் திற்பரப்பு அருவியில் வெள்ளப்பெருக்கு குறைந்து தண்ணீர் இயல்பு நிலைக்கு வந்தது. தற்போது தண்ணீர் மிதமாகப் பாய்வதால் நேற்று மதியம் திற்பரப்பு அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க விதித்திருந்த தடை விலக்கப்பட்டது. பள்ளி, கல்லூரி விடுமுறை நாள் என்பதால் ஏராளமான சுற்றுலா பயணிகள் குடும்பத்துடன் வருகை தந்து அருவியில் குளித்து உற்சாகமாய் சென்றனர். மேலும், அவ்வப்போது பெய்துவரும் சாரல் மழையால் திற்பரப்பில் குளு குளு சீசன் நிலவியது.

# மெய்யூர் – மொண்ணவேடு இடையே கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே தரை பாலம் நீரில் மூழ்கி போக்குவரத்து பாதிப்பு



ஊத்துக்கோட்டை, டிச.11- திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஒன்றியம், மெய்யூர் - மொண்ணவேடுஇடையே கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் உள்ளது. இதன் வழியாக மெய்யூர், கல்பட்டு, மாளந்தூர், ஏனம்பாக்கம் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட கிராம மக்கள் திருவள்ளூர் சென்றுவர இந்தப் பாலத்தை பயன்படுத்தி வந்தனர்.

இந்நிலையில், கடந்த சிலநாட்களாகமாண்டஸ் புயல் காரணமாக பூண்டி நீர்த்தேக்கத்தில் தண்ணீர் இருப்பு கிடுகிடுவென உயர்ந்தது. ஏரியின் பாதுகாப்பைக் கருதி ஏரியிலிருந்து உபரிநீரை அதிகாரிகள் திறந்து விட்டனர். இதனால் கொசஸ்தலை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இதனால் மெய்யூர் - மொண்ணவேடு இடையே கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே இருந்த தரைபாலம்நீரில்மூழ்கியது. இதனால் கொசத்தலை ஆற்றை கடந்து செல்ல முடியாமல் வாகன போக்குவரத்து முற்றிலும் தடைபட்டது. இப்பாலம் சேதமடைந்ததால் 10க்கும் மேற்பட்ட கிராம மக்கள் நேற்றுவிடியற்காலைமுதல் சித்தஞ்சேரி, மயிலாப்பூர் என மாற்றுப் பாதையில் பல கிலோமீட்டர் தூரம் சுற்றிக்கொண்டு திருவள்ளூர் சென்று வருகின்றனர்.

கடந்தாண்டு இப்பகுதியில் உயர் மட்ட மேம்பாலம் கட்ட தமிழக அரசு உத்தரவிட்டது. ஆனால், அந்த மேம்பால பணி ஆமை வேகத்தில் நடைபெறுவதால் பணி நிறைவு பெறவில்லை. இதனால் மக்கள் கொசஸ்தலை ஆற்றை கடக்கமிகவும்சிரமத்துக்கு உள்ளாகின்றனர்.

எனவே, சேதமடைந்த இந்த தரைப்பாலத்தை போர்க்கால அடிப்படையில் சீரமைத்து தர வேண்டும். உயர்மட்ட மேம்பாலத்தை போர்க்கால அடிப்படையில் கட்டி கொடுத்து மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்க வேண்டும் என இப்பகுதி கிராம மக்களும், சமூக ஆர்வலர்களும், விவசாயிகளும்கோரிக்கை விடுத்துள்ளனர்.



▶ திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி பேரூராட்சியில் மாண்டஸ் புயல் முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் குறித்து பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் முமாஹின் அபுபக்கர் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது பேரூராட்சி செயல் அலுவலர் கலாதரன், நியமனக்குழு உறுப்பினரும், 10வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினருமான கண்ணதாசன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



▶ தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நடைபெற்ற கிராம உதவியாளர் பணியிடங்களுக்கான விடைத்தாள் திருத்தும் பணியினை மாவட்ட ஆட்சியர் ஆகாஷ் நேரில் ஆய்வு செய்தார்.



▶ வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சர்வதேச பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் ஆட்சியர் குமாரவேல் பாண்டியன் தலைமையில் கருத்தரங்க கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மகளிர் திட்ட இயக்குநர் செந்தில்குமரன், சமூக நல அலுவலர் கோமதி, குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் உமா மகேஷ்வரி, மாற்றத்திறனாளிகள் நல அலுவலர் சரவணன் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மயிலாடுதுறை மாவட்டத்தை தேசிய பேரிடர் மாவட்டமாக அறிவிக்க வி.சி.க., ஆர்ப்பாட்டம்



சீர்காழி, டிச.11 - மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி பழைய பஸ் நிலையம் அருகில் பல்வேறு கோரிக்கை வலியுறுத்தி விடுதலை சிறுத்தைகள் கட்சிசார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு மாநிலவணிகரணிதுணை செயலாளர் விஜயரங்கன் தலைமை தாங்கினார். மாவட்ட வணிகரணி துணை அமைப்பாளர்கள் வேதா,ஸ்டாலின்,ஹென்றி ஜான்சன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஸ்டாலின் அரசு, தினேஷ் மேத்தா முன்னிலை வைத்தனர். மாவட்ட செய்தி தொடர்பாளர் தேவா வரவேற்று பேசினார்.

ஆர்ப்பாட்டத்தில், மாவட்ட செயலாளர் ரவிச்சந்திரன், பாராளுமன்ற தொகுதி செயலாளர் கதிர்வளவன், இஸ்லாமிய ஐக்கிய பேரவை மாநில துணை செயலாளர் ரியாஸ் கான் ஆகியோர் பல்வேறு கோரிக்கை வலியுறுத்தி கண்டன உரை ஆற்றினார்.

அதில், சீர்காழி அரசு மருத்துவமனையை நவீனப்படுத்தி 24 மணி நேரமும் மருத்துவர் நியமனம் செய்ய வேண்டும். மயிலாடுதுறை மாவட்டத்தை தேசிய பேரிடர் மாவட்டமாக அறிவிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூ.5,000 வழங்க வேண்டும். நகராட்சி, பேரூராட்சி பகுதிகளில் 100 நாள் வேலை திட்டத்தை அமல்படுத்த வேண்டும்.

சீர்காழி பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள கழுமலை வாய்க்கால், புறவாய்க்கால், இரட்டை வாய்க்கால் உள்ளிட்ட வாய்க்கால்களை முழுமையாக தூர் வரவேண்டும். சீர்காழி நகராட்சிஉட்பட்டபகுதிகளில் உள்ள குடிசைகளை அகற்றி கான்கிரீட் வீடுகள் அமைத்து தர வேண்டும். புளிச்சக்காடு பகுதியில் பகுதிநேர அங்காடி திறக்க வேண்டும்.

சீர்காழி பகுதியில் கோவில் இடங்களில் குடியிருக்கும் மக்களுக்கு அரசு பட்டா வழங்க வேண்டும். நகராட்சி உட்பட்ட அனைத்து ஏழை, எளிய மக்களுக்கும் இலவச வீட்டு மனை பட்டாவழங்கவேண்டும். சீர்காழி நகர் பகுதியில் சேதம் அடைந்தநிலையில் உள்ள சாலைகளை சீரமைத்து தர வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் தொண்டரணி அமைப்பாளர் வைத்தியநாதன், மாவட்ட நிர்வாகிகள் ஆசைத்தம்பி, அன்புச்செல்வன், ஞானவல்லி, சீர்காழி வர்த்தகரணி செயலாளர் சிவா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# இன்று 6 மாவட்டத்தில் மிக கனமழைக்கு வாய்ப்பு சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை!

சென்னை, டிச.11- சென்னையில் 2 நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. தமிழகம் மற்றும் புதுச்சேரியில் நாளை 12ம் தேதி மற்றும் 14ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. தமிழகத்தில் இன்று 6 மாவட்டங்களில் மிக கனமழையும், 6 மாவட்டங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

அதன்படி, ராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் இன்று மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. இதேபோல், திருவள்ளூர், காஞ்சிபுரம், கள்ளக்குறிச்சி, சேலம், ஈரோடு, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது. தொடர்ந்து, நாளை ஈரோடு, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், கரூர், நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், தென்காசி உள்பட 12 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் நாளை 12ம் தேதி மற்றும் 14ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. வடகிழக்கு, புதுச்சேரியில் அவ்வப்போது பலத்த தரைக்காற்று மணிக்கு 30 முதல் 40 கி.மீ., வேகத்தில் வீசக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னையில் 2 நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் சில இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# சினிமா செய்திகள்



## ஒரே வருடத்தில் 9 படங்கள் ஐஸ்வர்யா லட்சுமி மகிழ்ச்சி

இந்தாண்டு 9 திரைப் படங்களில் நடிதுதள்ளது மன நிறைவை தந்துள்ளதாக நடிகைஐஸ்வர்யா லட்சுமிதெரிவித்துள்ளார்.

விஷாலின் ‘ஆக்ஷன்’ படம் மூலம் தமிழில் அறிமுகமானவர், மலையாள நடிகை ஐஸ்வர்யா லட்சுமி. தொடர்ந்து ‘ஜகமே தந்திரம்’ உட்பட சில படங்களில் நடித்த அவர், இந்த வருடத்தில் 9 படங்களில் நடித்துள்ளார்.

தெலுங்கு படங்களிலும் நடித்து வரும் ஐஸ்வர்யா லட்சுமி, ‘புத்தம் புது காலை விடியாதா’, ‘அர்ச்சனா 31 நாட் அவுட்’ (மலையாளம்), ‘கோட்சே’ (தெலுங்கு), ‘கார்கி’, ‘கேப்டன்’, ‘பொன்னியின் செல்வன் 1’, ‘கட்டா குஸ்தி’, ‘அம்மு’ (தெலுங்கு), ‘குமாரி’ (மலையாளம்) ஆகிய படங்களில் நடித்துள்ளார். இந்த வருடம் தனக்கு மன நிறைவை தந்திருப்பதாகக் கூறியுள்ளார்.

‘மறுபிறவி போல் உணர்கிறேன்’

## புற்றுநோயில் இருந்து மீண்ட நடிகை நெகிழ்ச்சி



மறுபிறவி போல் உணர்கிறேன்’ என்றுபுற்றுநோயிலிருந்து மீண்ட தெலுங்கு நடிகை ஹம்சா நந்தினி தெரிவித்துள்ளார்.

‘நான் ஈ’, ‘ருத்ரமாதேவி’ உள்பட பல படங்களில் நடித்திருப்பவர், தெலுங்கு நடிகை ஹம்சா நந்தினி. கடந்த வருடம் மார்பக புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த இவர், அதற்காக அறுவைச் சிகிச்சை மற்றும் 9 முறை கீமோ சிகிச்சைப் பெற்றார். இப்போது குணமடைந்துள்ளார். வியாழக்கிழமை தனது 38 வது பிறந்த தினத்தை சினிமா படப்பிடிப்பில் கொண்டாடிய அவர், தான் மறுபிறவி எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

“நான் மீண்டும் வந்துவிட்டேன். மறுபிறவி எடுத்தது போல உணர்கிறேன். உங்கள் அன்பும் ஆதரவும் இல்லாமல் இது சாத்தியமில்லை. அனைவருக்கும் அன்பு முத்தங்கள்” என்று தெரிவித்துள்ளார். அவர் எந்தப் படத்தின் படப்பிடிப்பில் கலந்துகொண்டார் என்பதை தெரிவிக்கவில்லை.

## சமந்தா போல் தசை அழற்சி நோயால் பாதிக்கப்பட்ட பியா



நடிகை சமந்தா போல நடிகை பியாவும் தசை அழற்சி நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

‘பொய் சொல்லப் போறோம்’, ‘ஏகன்’, ‘கோவா’, ‘கோ’ உட்பட சிலபடங்களில் நடித்தவர், பியா. இவர், சமந்தாவைப் போல தானும் ’மையோசைடிஸ்’ என்கிற ‘தசை அழற்சி’ நோயால் பாதிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.இதுபற்றி அவர் கூறியிருப்பதாவது:

கடந்த 2016ம் ஆண்டு, ஒருநாள்,காலில்வீக்கத்தை கவனித்தேன். அதைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டேன்.

மறுநாள் மற்றொரு காலும் வீங்கி இருந்தது. தசை வலியும் அதிகமாக இருந்தது. வலி இல்லாமல் உட்காரவோ, நிற்கவோ முடியவில்லை. பிறகு மருத்துவரிடம் பரிசோதனை செய்தேன். ‘தசை அழற்சி’ நோய் இருப்பது தெரியவந்தது. பயந்தேன்.

எய்ம்ஸ்மருத்துவமனை சென்று சிகிச்சைப் பெற்றேன். அந்த நாட்கள் பயங்கரமானவை. அதை மருந்துகளால் மட்டுமே கட்டுப்படுத்த முடியும். ஆரோக்கியமே உண்மையான செல்வம் என்பதை அந்த நாட்கள் எனக்கு உணர்த்தின. சமந்தாவின் நிலையை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. அவர் விரைவில் குணமடைவார். அவருக்காகபிரார்த்தனை செய்துவருகிறேன். இவ்வாறு பியா தெரிவித்துள்ளார்.

# விளையாட்டு செய்திகள்

## மாற்று வீரரும் ஆக்டிவ் வீரரே...ஐ.பி.எல். கிரிக்கெட்டில் புதிய விதி அறிமுகமாகிறது



கிரிக்கெட்டில் மாற்று வீரர் பேட்டிங் செய்யவோ, பந்து வீசவோ முடியாது. கிரிக்கெட்டில் 11 வீரர்கள் களம் இறங்கி விளையாட முடியும். ஒருவேளை ஒரு வீரருக்கு காயம் ஏற்பட்டால் அவருக்கு பதிலாக மாற்று வீரர் களம் இறங்கலாம். ஆனால் இவரால் பீல்டிங் மட்டுமே செய்ய முடியும். பந்து வீசவோ, பேட்டிங் செய்யவோ முடியாது.

இதனால், ஒரு அணியின் நட்சத்திர பேட்ஸ்மேன் காயம் அடைந்தால், அந்த அணியின் பேட்டிங் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்படும். அதேபோல்தான் பந்து வீச்சாளருக்கு காயம் ஏற்பட்டால், பந்து வீச்சில் சிரமம் ஏற்படும். இதனால் மாற்று வீரர்கள் ஏன் ஆக்டிவ் வீரராக செயல்படக் கூடாது? என்ற கேள்வி எழுந்து கொண்டே இருக்கிறது. ஆனால், அது ஒரு அணிக்கு சாதகமாக முடிந்து விடும் என்பதால் ஐ.சி.சி. இன்னும் சர்வதேச கிரிக்கெட்டில் இந்த முறையை அமல்படுத்தாமல் உள்ளது.

சில வருடங்களுக்கு முன், ஒரு வீரருக்கு தலையில் அடிபட்டு அவரால் விளையாட முடியாது நிலை ஏற்பட்டால்,மருத்துவர்கள் அறிவுரையின்படி மாற்று வீரரை களம் இறக்க ஐ.சி.சி. சம்மதம் தெரிவித்துள்ளது. இந்த நிலையில் ஐ.பி.எல். கிரிக்கெட்டில் மாற்று வீரரை அக்டிவ் வீரராக செயல்பட பி.சி.சி.ஐ. முடிவு செய்துள்ளது. வரவிருக்கும் ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் இதனை அறிமுகப்படுத்த இருக்கிறது. ஒரு அணியில் அதிகபட்சம் 4 வெளிநாட்டு வீரர்கள் களம் இறங்கலாம். 7 இந்திய வீரர்கள் இடம் பெறவேண்டும். தற்போது இந்திய வீரரை மட்டும் மாற்றம் செய்ய பி.சி.சி.ஐ. முடிவு செய்துள்ளது.

அதன்படி மாற்று வீரராக களம் இறங்கும் வீரர் பந்து வீச முடியும். பேட்டிங் செய்ய முடியும். கால்பந்து, ரக்பி போன்ற போட்டிகளில் மாற்று வீரர்கள் ஆக்டிவ் வீரராக செயல்படுவார்கள். அதேபோன்று இதிலும் கொண்டு வர பி.சி.சி.ஐ. முடிவு செய்துள்ளது.

இதற்கு முன்னோட்டமாக இந்தியாவில் நடைபெற்ற டி20 கிரிக்கெட் சையது முஷ்டாக் அலி தொடரில் பரிசோதனை செய்யப்பட்டது. அதற்கு வரவேற்பு கிடைக்கவே ஐ.பி.எல். கிரிக்கெட்டில் வரவிருக்கிறது. ஆனால், அதுகுறித்து முழுமையாக விதிமுறையை பி.சி.சி.ஐ. இன்னும் வெளியிடவில்லை. ஐ.பி.எல். அணிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி நிர்வாகம் இறுதி முடிவை அறிவிக்கும்.

## இரட்டை சதம் விளாசி இஷான் கிஷன் சாதனை!



சிட்டகாங், டிச.11 - வங்காளதேசம் மற்றும் இந்திய கிரிக்கெட் அணிகளுக்கு இடையேயான 3-வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி சிட்டாகாங்கில் நேற்று நடைபெற்றது. டாஸ் வென்ற வங்காளதேச அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. இந்தியா முதலில் பேட்டிங் செய்கிறது.

இப்போட்டியில் இந்திய அணியின் இளம் வீரர் இஷான் கிஷன் இரட்டை சதம் அடித்து சாதனை படைத்தார். 85 பந்துகளில் சதம் கடந்த அவர், 126 பந்துகளில் இரட்டைச் சதம் என்ற சாதனையை எட்டினார். இதில் 23 பவுண்டரிகள், 9 சிக்சர்களும் அடங்கும்.

இது அவர் அடிக்கும் முதல் இரட்டை சதம் ஆகும். இரட்டைச் சதம் அடித்த இந்திய வீரர்கள் வரிசையில் நான்காவதாக இணைந்துள்ளார் இஷான் கிஷன். இதற்கு முன்பு சச்சின் டெண்டுல்கர், வீரேந்திர சேவாக், ரோகித் சர்மா ஆகியோர் இரட்டை சதம் அடித்துள்ளனர்.





▶ புதுக்கோட்டை திமுக மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் உரக்கடை எம்.கருப்பையா - காந்தி தம்பதியினரின் பேத்தியும் மு.க.குமரேசன் விஜயலட்சுமி தம்பதியினரின் மகள் சுவாதிலெட்சுமிகாந்தி, மணமகன் டாக்டர் மணிகண்டன் ஆகியோரது திருமண விழா புதுக்கோட்டை ஏடிஆர் திருமண மண்டபத்தில் இன்று நடைபெறுகிறது. நேற்று நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் தமிழக அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் மாநில, மாவட்ட திமுக நிர்வாகிகள், தொழிலதிபர்கள் ஏராளமான கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி சிறப்பித்தனர்.

# வெங்கடேஸ்வரா பள்ளி மாணவர்கள் பாரதியார் பிறந்த நாளில் அசத்தல்!



**புதுக்கோட்டை,டிச.11-** புதுக்கோட்டை, திருக்கோகர்ணம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளியில் பாரதியாரின் 140வது பிறந்தநாள் விழாவில பாரதியாரின் படத்திற்கு பள்ளி மாணவர்கள் பாரதியின் புத்தகத்தை கையில் ஏந்தி மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் பள்ளி மாணவி தர்ஷனா பாரதியாரின் பாடல்களை பாடினார்.

தேச விடுதலைக் காகவும், பெண் விடுதலைக்காகவும் சமூக நல்லிணக்கத்திற்காகவும், பாடல்களை, கவிதைகளை, கட்டுரைகளை எழுதி விழிப்புணர்வூட்டிய மகாகவி பாரதியின் பிறந்தநாள் விழாவை கொண்டாடும் விதமாக பள்ளி மாணவர்கள் பாரதியின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்வில் பள்ளி முதல்வர் தங்கம் மூர்த்தி கலந்து கொண்டு பாரதியார் பற்றிய செய்திகளை பகிர்ந்து கொண்டார். மேலும் துணை முதல்வர் குமாரவேல் உள்ளிட்ட ஏராளமான பள்ளி ஆசிரியர்களும், மாணவர்களும் மலர்தூவி மரியாதை செய்தனர்.



▶ புதுக்கோட்டை மாவட்ட அமெச்சூர் பளு தூக்கும் சங்கம் நடத்தும் மாநில அளவிலான பளு தூக்கும் போட்டி புதுக்கோட்டை மவுண்ட் சீயோன் மெட்ரிக் பள்ளியில் நேற்று துவங்கியது. திமுக நகர செயலாளர் செந்தில், நகர்மன்ற உறுப்பினர்கள் அண்ணன் சுப. சரவணன், கார்த்திக் மெஸ் மூர்த்தி ஆகியோர் தொடங்கி வைத்தனர். அருகில் சங்கத்தின் நிர்வாகிகள் உள்ளனர்.

# புதுகை மாவட்ட பா.ஜ.க., பொருளாளராக விஜய் பேலஸ் முருகானந்தம் நியமனம்!

**புதுக்கோட்டை, டிச.11-** புதுக்கோட்டை மாவட்ட பாரதிய ஜனதா கட்சி மேற்கு மாவட்ட புதிய நிர்வாகிகள் பட்டியல் மாவட்டத் தலைவர் விஜயகுமார் தலைமையில் தேசிய பொதுக்குழு உறுப்பினர் புரட்சி கவிதாசன், மாவட்ட பார்வையாளர் பழ செல்வம் ஆகியோர் முன்னிலையில் வெளியிடப்பட்டது.



அதன் விபரம் வருமாறு: புதுக்கோட்டை மாவட்ட துணைத் தலைவர்கள் தியாகராஜன், ஜீவானந்தம், செல்லதுரை, ராஜ்குமார், சாந்தர், சாந்திமுத்து, அஞ்சலை மாவட்ட பொதுச் செயலாளர்கள் ஏ.வி.சி.சி.கணேசன், குரு ஸ்ரீராம், சண்முகசுந்தரம், மாவட்டச்செயலாளர்கள் மதியழகன், சுந்தரவேல், கங்காதரன், நித்தியகல்யாணி, காளீஸ்வரி, ரேவதி, மாவட்ட பொருளாளராக தொழிலதிபர் விஜய் பேலஸ் முருகானந்தம்.

மாவட்ட அலுவலக செயலாளராக சந்திரசேகரன், புதுகை ஒன்றிய தலைவர்களாக மேற்கு லட்சுமணன், கிழக்கு சக்திவேல், வடக்கு சின்னதுரை, தெற்கு குமார், கறம்பக்குடி வடக்கு பாலசுப்ரமணியன், தெற்கு பரிமள ஈஸ்வரன், கந்தர்வகோட்டை ஒன்றியம் தவமணி, குன்னாண்டார் கோவில் கிழக்கு ராஜா, மேற்கு வினோத்குமார், அன்னவாசல் வடக்கு முருகையா, தெற்கு அன்பழகன்.

விராலிமலை கிழக்கு பாலசுப்ரமணியன், மேற்கு சுந்தரம் ஆகியோரும். மாவட்டத் தலைவர்களாக இளைஞரணி தலைவராக கார்த்திகேயன், மகளிர் அணி தலைவராக சித்ரா, விவசாய அணி தலைவராக ராகவன், ஓ.பி.சி., அணி தலைவராக மணிராஜன், எஸ்.சி., அணி தலைவராக சண்முகம், எஸ்.டி., அணி தலைவராக சரவணகுமார், சிறுபான்மை அணி தலைவராக லாசர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# இமாச்சலப் பிரதேச முதல்வராக சுக்விந்தர் சிங் சுகு தேர்வு



**ஷிம்லா, டிச.11-** இமாச்சலப் பிரதேசத்தின் முதல்வராக சுக்விந்தர் சிங் சுகு தேர்வு செய்யப்பட்டுள்ளார். துணை முதல்வராக முகேஷ் அக்னிஹோத்ரி தேர்வாகி உள்ளார்.

இமாச்சலப் பிரதேச சட்டப்பேரவைத் தேர்தல் கடந்த நவம்பர் 12ம் தேதி நடைபெற்றது. இதில் பதிவான வாக்குகள் கடந்த 8ம் தேதி எண்ணப்பட்டு அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதில், காங்கிரஸ் மொத்தமுள்ள 68 தொகுதிகளில் 40 தொகுதிகளை கைப்பற்றியது. பா.ஜ.க., 25 இடங்களில் வெற்றி பெற்றது. சுயேட்சைகள் 3 தொகுதிகளில் வெற்றி பெற்றனர். அருதிப் பெரும்பான்மையுடன் காங்கிரஸ் வெற்றி பெற்றதை அடுத்து, அக்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில், கட்சியின் சட்டமன்றத் தலைவராக அதாவது முதல்வராக யாரும் தேர்ந்தெடுக்கப் படவில்லை. மாறாக, யார் முதல்வர்? என்பதை கட்சித் தலைமை முடிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதையடுத்து, இது தொடர்பாக கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தியுடன் ஆலோசனை மேற்கொண்டார். அதில், முதல்வராக சுக்விந்தர் சிங் சுகு தேர்வு செய்யப்பட்டார். எனினும் இது குறித்த அறிவிப்பு உடனடியாக வெளியிடப்படவில்லை.

காங்கிரஸ் தலைமையின் முடிவை அடுத்து, தலைநகர் ஷிம்லாவில் கட்சி எம்.எல்.ஏ.,க்களின் கூட்டம் நடைபெற்றது. இதில், இமாச்சலப் பிரதேச காங்கிரஸ் பொறுப்பாளர் ராஜீவ் சுக்லா, சத்தீஸ்கர் முதல்வர் பூபேஷ் பெகல், "இமாச்சலப் பிரதேச காங்கிரஸ் தலைவர் பிரதிபா வீரபத்ர சிங் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பூபேஷ் பெகல், இமாச்சலப் பிரதேசத்தின் முதல்வராக சுக்விந்தர் சிங் சுகு தேர்வு செய்யப்பட்டுள்ளார். துணை முதல்வராக முகேஷ் அக்னிஹோத்ரி தேர்வாகி உள்ளார் என தெரிவித்தார்.

இதையடுத்துப் பேசிய சுக்விந்தர் சிங் சுகு, "இமாச்சலப் பிரதேச முதல்வராக பணியாற்ற வாய்ப்பளித்த சோனியா காந்தி, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் அரசு இமாச்சலப் பிரதேசத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும். இமாச்சலப் பிரதேச மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது.

மாநிலத்தின் வளர்ச்சிக்காக நாங்கள் பாடுபடுவோம். துணை முதல்வராக தேர்வாகி உள்ள முகேஷ் அக்னிஹோத்ரியும் நானும் இணைந்து செயல்படுவோம். நான் எனது அரசியல் வாழ்க்கையை 17 வயதில் தொடங்கினேன். இதுவரை காங்கிரஸ் கட்சி எனக்கு அளித்த வாய்ப்புகள் எதையும் நான் மறக்கவில்லை" என்றார்.

# முதல்வர் கான்வாயில் தொங்கியபடி பயணம் செய்த சென்னை மேயர் பிரியா.. வைரலாகும் வீடியோ

**சென்னை, டிச.11-** மாண்டஸ் புயல் பாதிப்பை ஆய்வு செய்த முதலமைச்சர் காரில் படியில் சென்று தொங்கியபடி சென்னை மேயர் பிரியா மற்றும் மாநகராட்சி ஆணையர் ககன் தீப் பேடி உள்ளிட்டோர் செல்லும் வீடியோ இணையத்தில் வைரலாக பரவி வருகிறது.

புயல் மற்றும் மழை பாதிப்புகள் குறித்து சென்னை கொட்டிவாக்கம், பாலவாக்கம் பகுதிகளில் முதலமைச்சர் ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர் நிவாரண உதவிகளை வழங்கினார். இதைத் தொடர்ந்து காசிமேடு மீன்பிடி துறைமுகத்துக்கு சென்ற முதலமைச்சர், சேதம் அடைந்த படகுகளை பார்வையிட்டார். மேலும் மீனவர்களை சந்தித்து குறைகளை கேட்டறிந்தார்.



அப்போழுது முதலமைச்சருடன் நகர்புற உள்ளாட்சித்துறை அமைச்சர் கே.என் நேரு, அறநிலைத்துறை அமைச்சர் சேகர் பாபு, சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னை மேயர் பிரியா மற்றும் மாநகராட்சி ஆணையர் ககன் தீப் சிங் பேடி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

மேலும் சென்னை மேயர் பிரியா மற்றும் ஆணையர் ககன் தீப் சிங் பேடி உள்ளிட்டோர் முதலமைச்சர் கான்வாயில் தொங்கியபடி சென்றனர். இந்த வீடியோ தற்போது சமூகவலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

# மாண்டஸ் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை பெரியளவு பாதிப்புகள் இல்லை: மு.க.ஸ்டாலின்



**சென்னை, டிச.11-** சென்னை மாண்டஸ் புயல் நேற்று நள்ளிரவு 2.30 மணியளவில் மாமல்லபுரம் அருகே கரையை கடந்தது. புயல் கரையை கடக்கும் நேரத்தில் 70 முதல் 80 கி.மீ., வேகத்தில் பலத்த காற்று வீசியது. புயல் கரையை கடந்த நேரத்தில் வீசிய பலத்த காற்றின் காரணமாக பல இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்தன. மேலும், கடலோர பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் புயல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மாண்டஸ் புயல் பாதிப்பு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் ஆய்வு செய்தார்.

தென்சென்னையில் புயல்பாதித்தஇடங்களான கொட்டிவாக்கம், பாலவாக்கம், ஈஞ்சம்பாக்கம், பனையூர் உள்ளிட்ட இடங்களில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார் சென்னை காசிமேட்டில் மாண்டஸ் புயலால் ஏற்பட்ட பாதிப்புகள், சேதமடைந்த படகுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

சென்னை, ஈஞ்சம்பாக்கம் பகுதியில் மாண்டஸ் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 500 உணவுபொட்டலங்கள் மற்றும் அரிசி உள்ளிட்ட நிவாரண பொருட்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

சென்னை, பெருங்குடி பகுதியில் மாண்டஸ் புயலால் பாதித்த மக்களுக்கு 3,000 உணவு பொட்டலங்கள் மற்றும் அரிசி உள்ளிட்ட நிவாரண பொருட்களை வழங்கினார். மாண்டஸ் புயல்தொடர்பானஅரசின் நடவடிக்கையில் மக்கள் திருப்தியாகஉள்ளனர் என சென்னை காசிமேட்டில் ஆய்வு செய்தபின்பு முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்ததாவது:

இரவு, பகல் பாராமல் பணியாற்றிய அமைச்சர்கள், அதிகாரிகள், மாநகராட்சி அதிகாரிகள், தூய்மைப் பணியாளர்கள் அனைவருக்கும் நன்றி. மாண்டஸ் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மாநகராட்சி பணியாளர்கள் விடிய விடிய, சிறப்பாக பணியாற்றினார்கள். பாதிப்புகள் குறித்து விடிய, விடிய அதிகாரிகளிடம் கேட்டறிந்தேன். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாக புயலால பெரிய அளவு பாதிப்புகள் இல்லை. தமிழக அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் மக்கள் பாதுகாக்கப் பட்டுள்ளனர்.

புயல், மழை பாதித்த இடங்களில் முழுமையாக மீண்டும் மின் விநியோகம் செய்யப்படும். புயல் சேத விவரங்கள் முழுமையாக கணக்கிட்ட பிறகு, உடனடியாக நிவாரணம் வழங்கப்படும். புயலால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கப்படும். தேவைப்பட்டால் மத்திய அரசின் உதவி கோரப்படும். இவ்வாறு முதல்வர் தெரிவித்தார்.




▶ தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணைய கூட்டரங்கில் நடைபெற்ற சர்வதேச மனித உரிமைகள் தின விழாவில், சட்டத் துறை அமைச்சர் ரகுபதி கலந்து கொண்டு பேசினார். இந்நிகழ்ச்சியில், சென்னை உயர்நீதிமன்ற செயல் தலைமை நீதியரசர் ராஜா, மாநில மனித உரிமைகள் ஆணைய தலைவர் நீதியரசர் பாஸ்கரன், சென்னையிலுள்ள அமெரிக்க நாட்டு தூதரகத்தின் தூதர் ஜீடித் ரவின், மாநில மனித உரிமைகள் ஆணைய செயலாளர் விஜயகார்த்திகேயன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



▶ புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், எல்.என்.புரம் ஊராட்சி, சுக்கிரன் குண்டு கிராமத்தில், பொதுமக்களின் அடிப்படைத் தேவைகள் குறித்து, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை ஆணையர் தாரேஸ் அஹமது, நேற்று பொதுமக்களிடம் குறைகளை கண்டறிந்தார்.

Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# தமிழகத்தில் ரூ.700 கோடி மாண்டஸ் புயலால் சேதம்!

# இமாச்சல பிரதேச முதல்வர் சுக்விந்தர் சிங் சுகு தேர்வு!





# சந்தனமரம் கடத்தல் வழக்கு மதுரை அருகே 4 பேர் கைது


சென்னை / புதுக்கோட்டை | 11.12.2022 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

சுப்பிரமணிய பாரதி , தமிழகக் கவிஞர், ஊடகவியலாளர் (பி.1882) (இ.1921)



பிரணப் முகர்ஜி , 13வது இந்தியக் குடியரசுத் தலைவர் (பி.1935) (இ.2020)



விசுவநாதன் ஆனந்த் , இந்திய சதுரங்க வீரர் (பி.1969)



## இன்றைய நினைவு நாள்

ஹன்டி பேரின்பநாயகம் , இலங்கைத் தமிழ்க் கல்விமான், சமூக சேவையாளர், அரசியல்வாதி (பி.1899) (இ.1977)



நானி பல்கிவாலா , இந்திய அரசியல்சட்ட நிபுணர், பொருளியல் அறிஞர் (பி.1920) (இ.2002)



ரவி சங்கர் , இந்திய சித்தார் இசைக்கலைஞர் (பி.1920) (இ.2012)



## பன்னாட்டு மலை நாள்